
# தமிழியல் ஆய்வுத் தடங்கள்

(தேசியக் கருத்தரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு)




பதிப்பாசிரியர்கள்

ப. ஆனந்தகுமார்

கு. கார்த்திகா

ஆ. ரூபா

ம. வித்யா

**தமிழியல் ஆய்வுத் தடங்கள்**
**(தேசிய கருத்தரங்கக் கட்டுரைகள்)**

முதல் பதிப்பு : மார்ச் 2016

உரிமை : பதிப்பாசிரியர்கள்

பக்கங்கள் : 888

வெளியீடு : **போதிவனம்**
அகமது வணிக வளாகம், தரைத்தளம்,
12/293, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 600 014.
அலைபேசி: +91 - 9841450437
bodhivanam@gmail.com

நூல் வடிவமைப்பு : கே.எஸ். கருணா பிரசாத்

விலை : **600**

**Thzmizhiyal Aaivu Thadangal**
**(Research papers presented in National Seminar)**

First Edition : March 2016

Copyright : Editors

Pages : 888

Publisher : **Bodhivanam**
Ahmed Complex Ground Floor,
12/293, Royapettah High Road,
Royapettah, Chennai-600 014.
Mobile : +91 - 9841450437

Design : K.S. Karuna Prasad

Price : **600**

ISBN No. : 978-93-80690-36-0

| | | |
|---|---|---|
| 109. முத்துச்செல்வி.சி | புதுக்கவிதையில் இயக்கச் சிந்தனைகள் | 665 |
| 110. முருகானந்தம்.இரா | கோட்பாட்டு நோக்கில் தலித் இலக்கியம் | 673 |
| 111. மேனகா.ஜெ | பரிபாடலில் – கணிதம் | 686 |
| 112. மோகன்.கோ | தமிழில் தலித்திய ஆய்வுக்கான முன்னெடுப்புகள் | 691 |
| 113. மோகன்காந்தி.க | ஆய்வாளர்கள் பார்வையில் நன்னனும் நன்னன் சேய் நன்னனும் | 698 |
| 114. மோகனா.இரா | சமூக இயக்கங்களின் ஊடாகப் பெண்ணியப் பார்வையில் மண்மகன் | 703 |
| 115. யாழினி.கோ | சங்க இலக்கியத்தில் "ஆதிமந்தி" | 709 |
| 116. ராஜா.பொ | பதிப்பு வெளியில் ஆய்வுகள்: முன்னெடுக்காமையும் முன்னிறுத்தாமையும் | 714 |
| 117. ரேணுகா.நா | தமிழியல் ஆய்வுலகில் ச.வையாபுரிப்பிள்ளை | 718 |
| 118. ரூபா.ஆ | கார்த்திகேசு சிவத்தம்பியின் மொழிக் கற்பித்தல் குறித்த ஆய்வு முறையும் நடைமுறைச் சிக்கல்களும் | 724 |
| 119. லட்சுமிபிரியா.மா | நவீனத் தமிழ்இலக்கிய கோட்பாடு இயக்கங்கள் | 729 |
| 120. லதா.க | திறனாய்வாளர்களும் சிலப்பதிகாரமும் | 734 |
| 121. லயோலா சூலியட் மேரி.பா | வர்க்க முரண்பாடு | 738 |

# தமிழியல் ஆய்வுலகில் ச.வையாபுரிப்பிள்ளை

**முனைவர் நா.ரேணுகா**
உதவிப் பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி
மதுரை

பேராசிரியர் ச.வையாபுரிப்பிள்ளை ஏறக்குறைய 40 ஆண்டுகள் தமிழியல் ஆய்வில் முழுமையாய் செயல்பட்டவர். இருபதாம் நூற்றாண்டுத் தமிழாய்வில், புதிய களங்களில் ஆய்வை நிகழ்த்தியவர். தருக்க நெறியில், அறிவியல் நெறிப்பட்ட ஆய்வை மேற்கொண்டவர். ஆராய்ச்சியாளர், படைப்பாளர், பதிப்பாசிரியர் எனப் பன்முக ஆளுமையாளராக விளங்கிய வையாபுரிப்பிள்ளையை அவரது சமூகப் பின்புலங்களைக் கொண்டே புரிந்து கொள்ள வேண்டும்.

- 19ஆம் நூற்றாண்டில் தோன்றிய பதிப்புச் சூழல்
- மேனாட்டாரின் புதிய கல்விமுறை
- பழந்தமிழ் இலக்கியங்கள் பதிப்பும் திராவிட மொழிச் சிந்தனையும்
- மேற்குறித்த பொருண்மை சார்ந்து வெளிவரத் தொடங்கிய தொடக்கக் கால ஆய்வுகள்
- 20ஆம் நூற்றாண்டு இலக்கிய இதழ்களின் தோற்றமும் ஆய்வுப் பணியும்

இக்காலப்பின்னணியில் தமிழியல் ஆய்வில் ஈடுபட்ட வையாபுரிப் பிள்ளையும் இச்சிந்தனைகளால் தாக்குறப்பட்டு, புதிய கருத்தாக்கங்களை நோக்கி, புதிய தளத்தில் செயல்படத் தொடங்கினார்.

"தமிழ்மொழி, அதிலுள்ள இலக்கியம், இலக்கணம் பற்றிய கொள் கைகள், தமிழ்ப் புலவரின் காலம், வாழ்க்கை, நூல்களின் தன்மை, தரம், அவை எழுதப்பெற்ற சூழ்நிலை, புலவருக்கும் அவரை ஆதரித்த அரசர், வள்ளல்கள் முதலியோருக்கும் இடையே நிகழ்ந்த உறவு ஆகியவைகளைப் பொருளாகக் கொண்டு, விருப்பும் வெறுப்பும் இன்றி, நம்பத் தகுந்த ஆதாரங்களை வைத்துத் தக்க பரிசிலனை முறைகளைக் கையாண்டு, தற்காலப் பண்புடன் ஆராய்ந்து, உண்மையை நாடும் முயற்சியே தமிழ் ஆராய்ச்சி ஆகும்."